லாயிலாஹ இல்லல்லாஹு லாயிலாஹ இல்லல்லாஹ்
லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்
முபஸ்மிலன் முஹம்திலன் முஸல்லியன் முஸல்லிமா
அலன்னபீவல் ஆலிவல்லஸ் ஹாபி ஸித்தி ஃபாத்திமா
மர்ஹபன் வமர்ஹபன் அஹ்லன் வஸஹ்லன் தாயிமா
லில்முஸ்தபா வல்முர்தழா வபுனாகுமா வல ஃபாத்திமா
ஆதியான நாயனுக்கு அடங்கலான புகழுமாம்
நீதியான நபிதமக்கு நித்தமும் ஸலவாத்துமாம்
பரகத்தான நாயகி பதூலெ (ண)ஸஹ்றா ஸித்தினா
ஹரக்கத்தான ஸல்லத்தை யகற்றி வைப்பீர் ஃபாத்திமா
தங்கமான தவ்லத்தே தயாளமான ரஹ்மத்தே
பங்கமான பாவத்தை பறக்க வைப்பீர் ஃபாத்திமா
ஃதனாவுக்குரிய தாயகி தவாபுக்குரிய நாயகி
தரணியெல்லாம் தான் புகழும் தாஹா மகளாம ஃபாத்திமா
ஜாகுபெற்ற அலியுல்லாஹ்வின் ஜாதியான செல்வியாம்
ஷாஹூ ஆலம் ஷா ஃபியிய்யின் சந்ததியாம் ஃபாத்திமா
ஹஸன் ஹூஸைன் வமுஹ்ஸினை அழாக பெற்ற மாதாவே
கஸ்தியான கருமம் நீக்கி காத்தருளும் ஃபாத்திமா
(மா)காலிக்குகந்த கண்மணி (மா)கைறான நபியின் கபிதத்தே
மாலிக்கான மன்னரின் மகராஜ் பெற்ற ஃபாத்திமா
தருமம் மிகுந்த தாபரமே தயவு செய்யுந் தருணத்தில்
வறுமம் பண்ணும் வம்பரை வதை செய்வீர்கள் ஃபாத்திமா
தாத்தின்னொளிவில் லுதித்தவொளிவால் தரித்தவொளிவே நாயகி
காத்திம்நபியின் பிலுஅத்தே கைருன்னிஸாவே ஃபாத்திமா
ரஹ்மத்தான ரஹ்மில் நின்றும் இரட்சிப்போ ரனந்தம்பேர்
தகுமதான குதுபுமார்கள் தரித்த ஸித்தி ஃபாத்திமா
(ண)ஜஹ்றா பீவி ஜீனத்தாய் சமானமற்ற நாயகி
துஹ்ரத்தாக துதிக்கும் நாயன் தூய ஸித்தி ஃபாத்திமா
சுவர்க்கந் தன்னில் ஸூரத்தாய் துலங்கிநின்ற நாச்சியார்
எவர்க்கும் பாவா வான ஆதம் ஏகிகண்ட ஃபாத்திமா
சிரசில் தாஜும் கழுத்தில் சவடி சிறப்பா இரண்டு காதிலும்
சிறக்கத் துலிக்கப் போட்டு துலங்கும் சிறந்த ஸித்தி ஃபாத்திமா
சந்தல் மணமாம் அந்தத் தாஜூ ஸாஹிபுல் பழீலத்தி
அன்த ஸூரத் தில்லமைந்த ஐவராகும் ஃபாத்திமா

லல்லத்தான சொல்லை நீக்கி ஷறயின் வழியில் (மா)கைறை நல்கி
இல்லத்தான மருளைப்போக்கி ஈடேற்றம் செய்யும் ஃபாத்திமா
தையிபான அப்துல்லாஹ் தன் கூடபிறந்த காஸீமாம்
ஊ)ஸைனபு உம்மு குல்துமாம் வ(ண)ஸைனப் ருகையா ஃபாத்திமா
லில்லில் லிவாவில் சேர்த்தருளும்சித்தமான ஹழரத்தில்
அல்லலகற்றி யாண்டருளும் ஆதி ஸித்தி ஃபாத்திமா
அர்ஷிடத்தில் அலிதமக்கு அமரர் கூடும் மஜ்லிஸில்
கருதி பெறவே மங்களக் கலியாணஞ் செய்த ஃபாத்திமா
(ப)னைபில் குறித்த மஹர் தமக்கு கோமானினைத்த ஷபாஅத்து
ஐபான பெண்கள் பாவங்களை அழிக்கும் ஸித்தி ஃபாத்திமா
ஃபாத்திமாவின் மகள்மகவே ஃபாத்திமாவின் மகந்தனக்கு
காத்திமான நபிமுடித்த கண்குளிர்ந்த ஃபாத்திமா
குர்றத்துல் ஐனைனியாம் குறைஷி குலத்தின் தீபமாம்
தர்றுன்வதமறத் துல்கதீஜா தங்கமகளாம் ஃபாத்திமா
கறமலிய்யுல் லாதமக்கு காதலி யிருக்கையில்
ஹறாமதாகும் மறுபெண் முடிக்க அறியும் ஸித்தி ஃபாத்திமா
லய்ஸலீ ஷய்வுன் ஸிவாக்கி லாயிகான ஹழரத்தில்
கையைப்பிடித்து காத்திரிய்யில் காட்சிகாட்டும் ஃபாத்திமா
மலக்கு ஜிப்றயீலைக் கண்டு மனதால் சொன்ன சொல்லுக்கு
கலக்கமகற்றி ஸித்கை யறிந்து காட்சி பெற்ற ஃபாத்திமா
நாச்சியாரின் மத்ஹை வோது நாட்டந்தீரும் நாள்தோறும்
ஹாஷிமாம் மன்றாட்டஞ் செய்யும் அரசி ஸித்தி ஃபாத்திமா
வரிசையான ஆயிஷாவும் வஸையால் வார்த்தை சொன்னதால்
பிரிசமாக நபியை மேலால பேசும் ஸித்தி ஃபாத்திமா
ஹாதியான வழியிலருளும் ஹாவு வாவு இரண்டையும்
காத்திமான அப்துல்லாஹ்வை காக்கும் ஸித்தி ஃபாத்திமா
லாமலாத லீ ஸிவாக்கி லாஸிமாலி வாவினில்
ஆமதாக்கி ஹழரத்துல் பகாவிலாக்கும் ஃபாத்திமா
ஏழைமனுக்கள் கேட்கும் துஅவை ஏற்றுக்கொள் யா ஃபாத்திமா
நாளை மஹ்ஷர் வேலையில்நஜாத்தை தருவீர் ஃபாத்திமா
வஸ்ஸலாமு மின்ஸலாமின் மஃஸலாத்தின் தாயிமா
அலா அபீகி வஅலைக்கி ஆலி ஸித்தி ஃபாத்திமா
காலஹாதா யிபுனுமன் கலீபத் ஷெய்கு பூக்கோயா
குதுபுஸ்ஸமானி பழ்லுல்லாஹி ஸிப்தி ஸித்தி ஃபாத்திமா